# பாலர்

## பைந்தமிழ் பாடல்கள்



**கயல்விழி அறிவொளி முன்பள்ளி**

(கயல்விழி ஒழுங்கை, அறிவொளி வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர்
## பைந்தமிழ் பாடல்கள்

ஆக்கம்
**"வயலூரான்"**
**செல்வராஜா சுதாகரன்**

வெளியீடு
**கயல்விழி அறிவொளி முன்பள்ளி,**
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரம்

நூலின் பெயர் : பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள்

நூலின் வகை : பாலர் பாடல்கள்

நூலாசிரியர் : செல்வராஜா சுதாகரன் (வயலூரான்)

பக்கங்கள் : 60

பிரதிகள் : 500

முதற் பதிப்பு : 2022 ஏப்ரல்

பதிப்புரிமை : நூலாசிரியர்

வெளியீடு : கயல்விழி அறிவொளி முன்பள்ளி
கயல்விழி ஒழுங்கை,
அறிவொளி வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்

பதிப்பு : மிக்கி பிறிண்டிங் ஸ்பெசலிஸ்ற்
கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

விலை : 750/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி வள்ளல் வயலூரரான் வாழ்க!

மா பலா தென்னை செழித்து வளர தென்றல் தாலாட்டும் தென்மராட்சியில் ஓர் சிற்றூராம் கல்வயலின் மைந்தன் செல்வராசா சுதாகரன் மட்டுவிலின் மணி மகுடம். இவர் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக சேவை புரிந்தபோதும் வயலூரான் என்னும் புனை பெயருடன் கவியுலகில் காலடி எடுத்து வைத்தார். இவர் பாலர் பாடல் திரட்டு, வேதவனம், வேதவன விநாயகர், பிள்ளைத்தமிழ், வயலூரான் வரிகள், நெஞ்சுறுத்தும் நிஜங்கள், பனிக்கண்டிக்காளி, பன்றித்தலைச்சி அம்மன் பிள்ளைத்தமிழ், வேதவன விநாயகர் கவசம், வேதவன விநாயகர் அந்தாதி, குருதி படாக் காயங்கள் ஆகிய நூல்களைப் படைத்து இச்சமூகத்துக்கு இன்னோரன்ன கருத்துக்களை உவந்தளித்துள்ளார்.

இப்படையல்கள் காரணமாக இவரைப் பூவுலகில் படைத்தவன் ஆசீர்வதமாக அறுநூறுக்கு மேற்பட்ட வெற்றிச் சான்றிதழ்களும் முப்பத்தி ஐந்திற்கு மேற்பட்ட விருதுகளும் பெற்றுள்ளார். இத்தோடு இவர் தன் கவியுலகப் பயணத்திலிருந்து விடைபெறவில்லை. தொடர்கிறது இவர் பயணம்.

இன்றைய அவசர உலகில் சிறுவர்களின் தேவை கருதி பாலர் பைந்தமிழ் பாடல்கள் என்னும் நூலை ஆக்கியமை என்னைப் பெரிதும் புளகாங்கிதமடையச் செய்துள்ளது.

தனது நூலில் கண்கண்ட தெய்வங்களெனப் போற்றப்படும் அம்மா அடுத்து அப்பா பற்றிப் பாடிய கவிஞர் ஐம்பது தலைப்புக்களில் ஆக்கிய பாடல்கள் ஒவ்வொன்றையும் படிக்கப் படிக்க இன்பம் பொங்குகின்றது.

இப் பாடல்கள் சிறுவர்களுக்கு இன்பம் தருவனவும், விழுமியப் பண்புகளை வளர்ப்பனவும், நற்பழக்க வழக்கங்களைப் போதிப்பனவும், சமூகம் சார்ந்த சூழல் சார்ந்த அறிவை விருத்தி செய்வனவுமாகக் காணப்படுகின்றன. புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கும் இந்நூல் பெரிதும் துணை புரியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இவ்வாறாக இன்றைய நவீன உலகில் தடம் மாறும் அபாயத்தில் இருக்கும் சிறுவர்களை நனெறிப்படுத்தக்கூடிய இவ்வரிய நூலை ஆக்கிய வயலூரான் என்னும் புனை பெயர் கொண்ட உயர்திரு செல்வராசா சுதாகரன் அவர்களின் வாழ்வு மலர்ந்து மணம் பரப்பவும் அவரது கவியுலகப் பயணம் தொடரவும் எல்லாம் வல்ல பன்றித்தலைச்சி அம்மனின் அருளும் ஆசியும் வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளர்க வெல்க.

**திருமதி சறோசாதேவி அரியநாயகம்,**
உதவிக்கல்விப்பணிப்பாளர் முன்பள்ளி,
வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அம்மா | 01 | 26. | சந்தை | 26 |
| 2. | அப்பா | 02 | 27. | சாலைவிதிகள் | 27 |
| 3. | அசான் | 03 | 28. | மருத்துவமனை | 28 |
| 4. | அம்புலி | 04 | 29. | பழங்கள் | 29 |
| 5. | புகைவண்டி | 05 | 30. | பட்டம் | 30 |
| 6. | மாட்டுவண்டி | 06 | 31. | செல்லப்பிராணி | 31 |
| 7. | விமானம் | 07 | 32. | தாலாட்டு | 32 |
| 8. | கப்பல் | 08 | 33. | தங்கத்தாத்தா | 33 |
| 9. | தோசை | 09 | 34. | பிறந்தநாள் | 34 |
| 10. | தொலைக்காட்சி | 10 | 35. | ஊஞ்சல் | 35 |
| 11. | தாய்மொழி | 11 | 36. | வானவில் | 36 |
| 12. | தாய்நாடு | 12 | 37. | நற்பழக்கவழக்கங்கள் | 37 |
| 13. | விளையாட்டு | 13 | 38. | மூத்தோர் | 38 |
| 14. | பூங்கா | 14 | 39. | பாட்டிசுட்ட வடை | 39 |
| 15. | நூலகம் | 15 | 40. | வண்ணத்துப்பூச்சி | 41 |
| 16. | பாடசாலை | 16 | 41. | வீட்டுத்தோட்டம் | 42 |
| 17. | தேர்த்திருவிழா | 17 | 42. | பசுவும் பாலும் | 43 |
| 18. | தீபாவளி | 18 | 43. | நட்பு | 44 |
| 19. | பொங்கல் | 19 | 44. | தொலைபேசி | 45 |
| 20. | நற்பழக்கம் | 20 | 45. | ஓலைத்தொப்பி | 46 |
| 21. | சுத்தம் | 21 | 46. | சப்பரத்திருவிழா | 47 |
| 22. | ஔவையார் | 22 | 47. | வருடப்பிறப்பு | 48 |
| 23. | வள்ளுவர் | 23 | 48. | மின்விளக்கு | 49 |
| 24. | நாவலர் | 24 | 49. | பாரதியார் | 50 |
| 25. | குடும்பம் | 25 | 50. | நான் விரும்பும் பறவைகள் | 51 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா



அம்மா அம்மா என்தாயே
ஆசை முத்தம் தருவாயே
சும்மா நீயும் இருக்காதே
சுவையாய் உணவு தருவாயே

அமுதாம் பாலைத் தருவாயே
அறிவுக் கதைகள் சொல்வாயே
அமுதின் இனிய பாடல்கள்
அழகாய் சொல்லித் தருவாயே

நோய்நொடி எம்மை அணுகாமல்
நோன்புகள் இருந்து காப்பாயே
வாய்மொழி கேட்டே மகிழ்வாயே
வாரி அணைத்துப் புகழ்வாயே

வளர்ந்து பெரிதாய் ஆனாலும்
வாரி அணைத்து மகிழ்வாயே
தளர்ந்து நீயும் போனாலும்
தாய்மை உணர்வு மறக்காயே

அம்மா உன்னை மறக்கேனே
அன்பாய் நாளும் காப்பேனே
சும்மா நீயும் வருந்தாதே
சுமையாய் உன்னை நினைக்கேனே

பள்ளிக்குக் கூட்டிச் செல்வாயே
பாடமுஞ் சொல்லித் தருவாயே
துள்ளி ஓடியே விளையாடத்
துணையாய் நீயும் இருப்பாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா



அப்பா அப்பா என்னப்பா
அன்பைப் பொழியும் என்னப்பா
தப்பே நானும் செய்தாலும்
தடவித் திருத்தும் என்னப்பா

தோளில் சுமந்து திரிவாயே
துயரம் தன்னைத் தீர்ப்பாயே
நாளும் இன்பம் தருவாயே
நன்மைகள் நாளும் செய்வாயே

வேண்டும் யாவும் தருவாயே
வேதனை தன்னைத் தீர்ப்பாயே
யாண்டும் உழைத்து இருப்பாயே
யாவையும் தந்து மகிழ்வாயே

உடுத்திட உடைகள் தருவாயே
உலக நடப்பைச் செல்வாயே
தொடுக்கும் வினாக்கள் சகலதுக்கும்
துடிப்பாய் விடைகள் தருவாயே

தப்பாது எம்மைக் காத்திடுவாய்
தரணியில் உயரச் செய்திடுவாய்
அப்பா உந்தன் பெருமையினை
அகிலம் போற்றச் செய்திடுவேன்.

எப்பவும் நாங்கள் இன்பமுடன்
இருந்தட வழிகள் தருவாயே
அப்பா உன்போல் எம்மீதே
அன்பைப் பொழிவார் யாரிங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்

பள்ளிக் கூடம் சென்றதுமே
பாடஞ் சொல்லித் தருவாராம்
துள்ளி நாமும் விளையாடத்
தூக்கி அணைத்துக் காப்பாராம்

சின்னச் சின்னக் கதைகூறிச்
சிரித்து மகிழச் செய்பவராம்
என்றும் எம்மேல் அன்போடு
இருக்கும் எங்கள் ஆசானாம்



ஆட்டம் பாட்டம் எல்லாமே
அழகாய் சொல்லித் தருவாராம்
வாட்டம் நாமும் காணாமல்
வகையாய் கதைகள் சொல்வாராம்

செல்லச் சண்டைகள் நாமிட்டால்
சேர்த்து அறிவுரை சொல்வாராம்
வெல்லும் வழிகள் பலசொல்லி
விரிவாய் விளக்கம் தருவாராம்

சின்னஞ் சிறார்கள் நாமெல்லாம்
செய்யும் சேட்டை எல்லாமும்
என்றும் பொறுத்துக் கொள்வாராம்
எம்மை என்றும் காப்பாராம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்புலி

அம்புலி அம்புலி வாவாவா
அமுத நிலவைத் தாதாதா
வெம்மை நீக்கிட வாவாவா
மேலாம் நிலவைத் தாதாதா

வட்டம் ஆகவே இருக்கின்றாய்
வானம் மீதில் வருகின்றாய்
இட்டம் போலே வருகின்றாய்
இரவில் ஒளியைத் தருகின்றாய்

பாலர் நாங்கள் விளையாடப்
பால்போல் நிலவைத் தருகின்றாய்
சீலம் மிகவும் கொண்டாயே
சிந்தை மகிழச் செய்வாயே

இருளைக் களைந்து ஒளிதருவாய்
இன்பம் நாளும் நீதருவாய்
தருணம் பார்த்து நீவருவாய்
தண்மை நிலவைத் தந்திடுவாய்

பாதி நாளில் தேய்கின்றாய்
பதட்டம் கொள்ளச் செய்கின்றாய்
மீதி நாளில் வளர்கின்றாய்
மிகவும் வியப்புத் தருகின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகைவண்டி

தனித்த வழியிற் சென்றிடுமாம்
தடயம் இன்றிச் சென்றிடுமாம்
தனக்கென ஒருவழி கொண்டதுவாம்
தானே தொடராய்ச் சென்றிடுமாம்


நீண்ட தூரம் சென்றிடுமாம்
நெஞ்சில் மகிழ்வு தந்திடுமாம்
காண்போர் மனதைக் கவர்ந்திடுமாம்
கடகட வெனவே சென்றிடுமாம்

பெட்டிகள் பலவும் கொண்டதுவாம்
பெருத்த உருவம் கொண்டதுவாம்
கட்டியே இழுத்துச் சென்றிடவே
கரிய இயந்திரம் கொண்டதுவாம்

அதிகம் பயணிகள் சென்றிடலாம்
அழகிய காட்சிகள் கண்டிடலாம்
அதிக பிரிவுகள் கொண்டதுவாம்
அதற்கே ஏற்பக் கட்டணமாம்

மலைகள் மீதும் சென்றிடுமாம்
மனதும் மகிழ்வு கண்டிடுமாம்
மலையிற் பாயும் நீரூற்றை
மகிழ்வாய் நாமும் கண்டிடலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாட்டுவண்டி

கடகட என்றே சென்றிடுமாம்
கல்லு வீதியும் கடந்திடுமாம்
தடதட என்றே ஓடிடுமாம்
தரையில் விரைந்து சென்றிடுமாம்

இரட்டை மாட்டு வண்டிலாம்
இலகாய் பயணஞ் செய்திடலாம்
முரட்டுக் காளைகள் தனைப்பூட்டி
முயன்று பயணஞ் செய்திடலாம்


ஒற்றை மாட்டு வண்டிலாம்
ஒழுங்காய் பயணஞ் செய்திடலாம்
பற்றைக் காட்டிலும் சென்றிடலாம்
பரவசம் நாமும் கண்டிடலாம்

எரிபொருள் இல்லா வாகனமாம்
எளிதாய் அமைந்த வாகனமாம்
உரித்துள உணவைத் தந்திட்டால்
உயர்ந்த பயனைப் பெற்றிடலாம்

சலங்கை பூட்டி விட்டிட்டால்
சல்சல் என்றே ஓடிவரும்
தலங்கள் யாவும் சென்றிடலாம்
தகுந்த வணக்கம் செய்திடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விமானம்

வானம் மீதிற் செல்லுமாம்
வகைகள் பலவும் கொண்டதுவாம்
கானம் பாடும் பறவைபோல்
கடிதிற் பறந்து சென்றிடுமாம்

தூரப் பயணம் செல்லவே
துணையாய் இதுவும் இருக்குமாம்
பாரம் மிகவும் கொண்டதுவாம்
பருத்த உருவங் கொண்டதுவாம்

நாடுகள் கடந்து சென்றிடுமாம்
நட்பை வளர்க்க உதவிடுமாம்
காடு களனி கடக்குமாம்
கடலின் மேலும் செல்லுமாம்

போரில் குண்டும் வீசிடுமாம்
பொல்லா அழிவும் தந்திடுமாம்
பாரிய சுமைகள் ஏற்றிடுமாம்
பறந்து சுமந்து சென்றிடுமாம்

உயர உயரப் பறக்குமாம்
உலகம் எங்கும் சுற்றுமாம்
பயணம் செல்ல உதவிடுமாம்
பலரும் போற்றும் விமானமாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கப்பல்

கப்பல் நல்ல கப்பலாம்
கடலிற் செல்லும் கப்பலாம்
தெப்பம் என்றும் சொல்லலாம்
தெரியா இடங்கள் பார்த்திடலாம்

வண்ண வண்ணக் கொடியேற்றி
வாகாய்க் கடலில் சென்றிடுமாம்
கண்ணைக் கவரும் வண்ணத்தில்
கடலில் இதுவும் சென்றிடுமாம்

சரக்குகள் ஏற்றிச் சென்றிடுமாம்
சத்தம் போட்டுச் சென்றிடுமாம்
பரந்து விரிந்த கடல்தனிலே
பாங்காய் இதுவும் சென்றிடுமாம்

நீரில் மிதந்து சென்றிடுமாம்
நெடிய பயணஞ் சென்றிடுமாம்
பாரில் பலவகை இதிலுண்டாம்
பார்த்து நாமும் களித்திடலாம்

போரிற் கூடப் பயன்படுமாம்
பொல்லா ஆயுதஞ் சுமந்திடுமாம்
பாரில் இதுபோல் பயனுடைய
படைப்பும் உண்டோ சொல்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோசை

தோசை நல்ல தோசையாம்
சுவை மிகுந்த தோசையாம்
ஆசை அம்மா சுட்டளித்த
அருமை ஆன தோசையாம்

வட்ட வட்டத் தோசையாம்
வடிவு மிகுந்த தோசையாம்
தொட்டுத் தேங்காய்த் துவையலுடன்
சுவையாய் உண்ணும் தோசையாம்

சத்து நிறைந்த தோசையாம்
தரணி புகழுந் தோசையாம்
சித்தம் மகிழ உண்ணலாம்
செகத்தில் மகிழ்வு காணலாம்

உழுந்து கலந்தும் சுட்டிடலாம்
உயரிய சுவையைப் பெற்றிடலாம்
உழுந்தின் உயர்ந்த சத்தினையே
உடலும் பெற்று வளர்ந்திடுமே

உண்ண உண்ண உண்ணலாம்
உள்ளம் மகிழ்வு காணலாம்
எண்ணம் போலே நாமெல்லாம்
எடுத்து மிகவே உண்ணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைக்காட்சி

வீட்டில் இருந்தே வெளியுலகில்
விளங்கும் காட்சிகள் எல்லாமும்
நாட்டம் கொண்டே கண்டிலாம்
நன்றாய்ப் பொழுதைப் போக்கிடலாம்


காணாத இடத்துக் காட்சிகளும்
கண்ணாற் கண்டு மகிழ்ந்திடலாம்
வீணான காட்சிகள் தவிர்த்திட்டே
விரும்பும் காட்சிகள் பார்த்திடலாம்

உலக நடப்பும் அறிந்திடலாம்
உடல்நலம் பற்றியும் அறிந்திடலாம்
பலபல செய்திகள் பார்த்திடலாம்
பாடல் ஆடலும் கண்டிடலாம்

சிறுவர் நிகழ்ச்சிகள் பார்த்திடலாம்
சிந்தனை தன்னை வளர்த்திடலாம்
அறுசுவை உணவாக்கும் முறைமை
அதனைக் கூடக் கண்டிடலாம்

ஆலய விழாக்கள் அறிந்திடலாம்
அவற்றின் சிறப்பை உணர்ந்திடலாம்
சாலச் சிறந்த கலைகளையே
சங்கடம் இன்றிப் பார்த்திடலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாய்மொழி

அம்மா சொன்ன அமுதமொழி
அதுவே எங்கள் தாய்மொழி
செம்மை நிறைந்த செந்தமிழே
செகத்தில் எங்கள் தாய்மொழியே

அமிழ்தம் போலே இனித்திடுமாம்
அதிக சுவையைக் கொண்டதுவாம்
தமிழே எங்கள் தாய்மொழியாம்
தரத்தில் உயர்ந்த செம்மொழியாம்

அகரம் முதலாய்க் கொண்டதுவாம்
அகிலம் புகழும் செம்மொழியாம்
சகத்தில் பழைமை மிக்கதுவாம்
சாலச் சிறந்த எம்மொழியாம்

இயலிசை நாடகம் என்றாங்கே
இயம்பும் பிரிவுகள் கொண்டதுவாம்
நயமிக நிறைந்த நன்மொழியாம்
நற்றமிழ் மொழியின் சிறப்பிதுவாம்

இலக்கண இலக்கியம் நிறைந்ததுவாம்
இயம்பிடச் சுவைமிகக் கொண்டதுவாம்
நிலமிசைப் பெருமை நீண்டதுவாம்
நிலைத்து நிற்கும் செம்மொழியாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்நாடு

பெற்ற தாயைப் போலாங்கே
பிறந்த நாடும் பெரிதாமே
பெற்ற பெருமை எல்லாமே
பிறந்த நாட்டின் சொத்தாமே

கற்ற கல்வியை முறைப்படியே
காசினி பயனுறச் செய்திடவே
உற்ற நாட்டின் பெருமையினை
உலகம் அறியச் செய்திடலாம்

பிறந்த நாட்டின் பெருமைகளைப்
பிறரும் அறியச் செய்திடணும்
சிறந்த நாடும் இதுவென்றே
சிறப்பை அதுவும் பெற்றிடணும்

நாட்டில் உள்ள வளங்களினை
நன்கு நாமும் பயன்படுத்தி
நாட்டை உயரச் செய்திடணும்
நலமே ஓங்கச் செய்திடணும்

உணவுத் தேவையை நிறைவாக்கி
உலகில் உயரச் செய்திடுவோம்
பணத்திற் குறையிலா நாடாக்கிப்
பாரில் உயரச் செய்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

கிட்டிப் புள்ளும் கிளித்தட்டும்
கீர்த்தி மிகுந்த விளையாட்டு
எட்டிப் பிடித்து விளையாடும்
ஏற்றம் மிக்க விளையாட்டு

சடுகுடு என்றொரு விளையாட்டு
தமிழர் தங்கள் விளையாட்டு
விடுவிடு என்றுமே ஒழிந்தது
விரைந்து அழிந்து போனது

சிலம்பம் என்றொரு விளையாட்டு
சிறப்பு மிகுந்த விளையாட்டு
கலக்கம் கொள்வார் பிறரிதனைக்
கண்டு வியந்து போவாரே

கும்மி என்றொரு விளையாட்டு
குமரியர் ஆடும் விளையாட்டு
தம்பி தங்கையர் சேர்ந்தாலும்
தரமாய் ஆடிடும் விளையாட்டு

எங்கள் பெருமை உணர்த்துகின்ற
ஏற்றம் மிகுந்த விளையாட்டுகள்
பங்கம் அடைந்துமே போனதுவே
பாரில் அழிந்து போனதுவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூங்கா

அழகு மலர்கள் நிறைந்ததுவாம்
ஆனந்தம் மிகவே தந்திடுமாம்
அழகுக் காட்சிகள் கொண்டதுவாம்
அகிலம் எங்கும் உள்ளதுவாம்


பற்பல மலர்கள் கொண்டதுவாம்
பாலர் எமக்கு மகிழ்விதுவாம்
பற்பல பொம்மைகள் கொண்டதுவாம்
பார்த்திட இனிமை மிகுந்திடுமாம்

சின்னஞ் சிறார்கள் நாமெல்லாம்
சிரித்து மகிழும் ஓரிடமாம்
வண்ணப் பறவைகள் போலாங்கே
வாட்டந் தீரத் திரிந்திடலாம்

அழகாய் அமைப்பாய் இருந்திடுமாம்
அசுத்தம் இல்லா இடமிதுவாம்
பழகிட இனிமை தந்திடுமாம்
பாரினில் இதுவே பயனுடைத்தாம்

ஓடியாடி விளையாட நல்ல
ஊஞ்சல் ராட்டினம் கொண்டதுவாம்
பாடியாடி மகிழ்ந்திடவே நல்ல
பாதைகள் நிறைந்த ஓரிடமாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலகம்

அரிய நூல்கள் பற்பலவும்
அழகாய் இங்கே தானிருக்கும்
பெரிய சிறிய அளவுகளில்
பெருமை மிகவே தானிருக்கும்

சிறுவர் எமக்கும் ஒருபகுதி
சிறப்பாய் இங்கே தானிருக்கும்
குறும்பு இன்றியே நாமெல்லாம்
கூடி அறிவைப் பெற்றிடலாம்

செய்தித் தாள்கள் பற்பலவும்
சீராய் இங்கே தானிருக்கும்
செய்ய நால்கள் பற்பலவும்
சீராய் அடுக்கித் தானிருக்கும்

இரவல் எடுத்தும் படித்திடலாம்
இருந்து அங்கும் படித்திடலாம்
தரவுகள் எல்லாம் சேர்த்திடலாம்
தங்கள் அறிவைப் பெருக்கிடலாம்

நாடி நூலகம் சென்றிடுவோம்
நல்ல நூல்கள் கற்றிடுவோம்
தேடி நூல்களை எடுத்திடுவோம்
தெரியா விடயந் தெரிந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை

பள்ளி சென்றே படித்திடலாம்
பாடம் நன்றாய் கற்றிடலாம்
துள்ளி ஓடித் திரிந்திடலாம்
துலங்கும் நட்பை வளர்த்திடலாம்

ஆசான் வருவார் அன்புடனே
அறிவை எமக்குத் தருவாரே
கூசாது அமர்ந்து கற்றிடுவோம்
குவலயம் தன்னில் உயரந்திடுவோம்

நட்புகள் பலவும் கிடைத்திடுமாம்
நன்மை பலவும் பெற்றிடலாம்
கெட்ட செயல்கள் தவிர்த்திடலாம்
கேண்மை மிகவே வாழ்ந்திடலாம்

சீருடை தன்னில் நாமெல்லாம்
சிறப்பாய் பழகும் ஓரிடமாம்
ஊரும் உலகும் போற்றுகின்ற
உன்னதம் ஆன ஓரிடமாம்

ஆடல் பாடல் விளையாட்டென
ஆனந்தம் தந்திடும் ஓரிடமாம்
கூடி மகிழ்வாய் நாமெல்லாம்
குதூகலம் காணும் ஓரிடமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழா



சித்திரம் நிறைந்த தேரதுவாம்
சிங்காரம் ஆகவே வலம்வருதாம்
இத்தரை மக்கள் ஒன்றாகியே
இழுத்து வாறாராம் இனிதாயே

ஊரிற் பெரிய ஒருதேராம்
உத்தம விநாயகர் வருதேராம்
பாரிற் சிறந்த கலைஞராலே
படைத்துத் தந்த ஒருதேராம்

பட்டுச் சட்டை தாவணியில்
பாவையர் இழுக்கும் ஒருதேராம்
பட்டு வேட்டி சால்வையோடு
பக்தர் இழுக்கும் ஒருதேராம்

சிற்பிகள் கூடிச் செதுக்கியதாம்
சிறப்புப் பலதும் கொண்டதுவாம்
பற்பல வடிவங் கொண்டதுவாம்
பார்த்து மகிழச் சிறந்ததுவாம்

வரலாறு பலவுங் கொண்டதுவாம்
வண்ணச் சிற்பமாய் செதுக்கியதாம்
அரனார் புகழைக் கூறிடுமாம்
அகமும் மிகவே மகிழ்ந்திடுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபாவளி

அசுரன் மறைந்த ஒருதினமாம்
அழகுப் பண்டிகைத் தினமிதுவாம்
பசுமை விளக்குகள் தாமெரித்து
பாரில் மகிழும் ஒருதினமாம்

புதுப்புது ஆடைகள் அணிந்திடலாம்
புதுச்சுவை உணவும் புசித்திடலாம்
புதுப்புது நட்பைப் பெற்றிடலாம்
புன்னகை பொங்க வாழ்ந்திடலாம்


ஐப்பசி தன்னில் வந்திடுமாம்
அழகுத் தினமாய் இருந்திடுமாம்
இப்புவி தன்னில் எமக்கெல்லாம்
இன்பம் தந்திடும் ஒருதினமாம்

பட்சணம் பலதும் சுவைத்திடலாம்
பட்டாசு வெடித்தும் மகிழ்ந்திடலாம்
பட்டாடை நாமும் உடுத்திடலாம்
பாடி ஆடியே மகிழ்ந்திடலாம்

பாலர் நாங்கள் மகிழ்ந்திடவே
பழகும் நல்ல பண்டிகையாம்
ஞாலத் தமிழர் மனமகிழும்
நல்ல பண்டிகைத் திருநாளாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கல்

பொங்கல் நல்ல பொங்கலாம்
புதிய பானைப் பொங்கலாம்
எங்கும் இன்பம் தந்திடுமாம்
எங்கள் வீட்டுப் பொங்கலாம்

முற்றம் தன்னை அழகாக்கி
மூன்று கல்லை அடுப்பாக்கி
சுற்றம் சூழப் புதுப்பானை
தூக்கி அடுப்பில் வைப்போமே

பானை நிறைய நீரூற்றிப்
பாலும் அதனில் தான்விட்டு
பானை பொங்கி வழிந்திடவே
பாய்ந்து அரிசி தனையிடுவோம்

சர்க்கரை பயறும் கலந்திடுவோம்
சரியாய் முந்திரி சேர்த்திடுவோம்
நர்த்தனம் ஆடியே மகிழ்ந்திடுவோம்
நாவும் சுவைக்க உண்டிடுவோம்

தையின் முதல்நாள் வந்திடுமாம்
தமிழர் திருநாள் எனப்படுமாம்
செய்ய இன்பம் தந்திடுமாம்
செகத்தில் மகிழ்வு தந்திடுமாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்பழக்கம்

காலையில் எழுவோம் கடன்களை முடிப்போம்
கருத்துடன் பாடம் படித்திடுவோம்
மாலையில் முழுதும் மகிழ்வுடன் கூடி
மாண்புடன் விளையாடி மகிழ்வோமே



மூத்தோர் சொல்லும் வார்த்தைகளை நாம்
முழுதாய் ஏற்றுப் பணிவோமே
ஆத்திரம் தன்னை அடக்கியே நாமும்
அன்பாய் வாழப் பழகுவோமே

உண்ணும் உணவைச் சிதறாமல் நாம்
உண்டு மகிழப் பழகிடணும்
பண்ணும் செயல்கள் எல்லாமே நமைப்
பாரில் உயர்த்தப் பண்ணிடணும்

வாழும் வழிகள் தெரியாது தினம்
வாடி மடியும் மக்களுக்கே
வாழும் வழிகள் பலகாட்டி நாம்
வளமாய் வாழச் செய்திடணும்



பணிவாய் வாழப் பழகிடணும் நாம்
பாழும் கோபம் தவிர்த்திடணும்
துணிவாய் தப்பை எதிர்த்திட நாமும்
தூண்டி அதனைத் தவிர்த்திடணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுத்தம்

சுத்தம் சுகத்தைத் தந்திடுமாம்
சூழும் நோயைத் தவிர்த்திடுமாம்
நித்தம் இதனைக் கைக்கொள்வோம்
நீண்ட காலம் வாழ்ந்திடுவோம்

நகங்கள் தனையே வெட்டிடுவோம்
நலமாய் வாழப் பழகிடுவோம்
சுகங்கள் நாளும் பெற்றிடவே
சூழல் தன்னைப் பேணிடுவோம்



அழுக்கு ஆடைகள் தவிர்த்திடுவோம்
அழகாய் உடையை அணிந்திடுவோம்
முழுதாய் வீட்டைப் பெருக்கிடுவோம்
முகிழும் இன்பம் கண்டிடுவோம்

குப்பை கூளம் அகற்றிடுவோம்
கூட்டி அதனை நீக்கிடுவோம்
உப்பை உணவில் குறைத்திடுவோம்
உடலில் கொழுப்பைக் குறைத்திடுவோம்



உண்ணும் முன்னர் கைகழுவி
உண்ண நாமும் பழகிடுவோம்
எண்ணம் தன்னில் சுகவாழ்வை
ஏற்று நாமும் மகிழ்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஔவையார்

அறநெறி தன்னைப் போதித்தாள்
ஔவை என்றே பேர்பெற்றாள்
முறைகள் பலவும் தந்திட்டாள்
முதிர்ந்த கிழவி இவள்தானே

ஆத்தி சூடியாம் அறநூலை
அகிலம் தன்னிற் தந்தவளாம்
ஏத்தி அவளைப் போற்றிடுவோம்
என்றும் மகிழ்வாய் வாழ்ந்திடுவோம்

மூதுரை நல்வழி சொன்னவளாம்
முதிர்ந்த அறிவுத் தாயிவளாம்
வாதுகள் பலவும் செய்தவளாம்
வையம் போற்றும் தாயிவளாம்

அழகுக் கந்தன் தன்னுடனே
அழகாய் வாதஞ் செய்தவளாம்
பழுகுந் தமிழின் பெருமைகளைப்
பாடல் பாடியே வளர்த்தவளாம்

இலகு தமிழிற் பாடல்கள்
இயற்றித் தந்த கவியிவளாம்
பலபல அறநெறி சொன்னவளாம்
பழகிட இனிய தாயிவளாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளுவர்

வாழ நல்ல வழிவகைகள்
வரிகள் இரண்டிற் சொன்னவராம்
ஆள வேண்டிய முறைகளினை
அழகாய் கவியில் சொன்னவராம்

சுருங்கச் சொல்லிக் கருத்துகளை
சூழ்புவி விளங்கத் தந்தவராம்
தருக்க நெறியும் சொன்னவராம்
தகுந்த பாடந் தந்தவராம்

அதிகாரம் பலவாய் இவர்தந்த
அழகுக் குறள்கள் பலவாமே
பதிகம் போலவே படித்திதனைப்
பயன்கள் பெற்று மகழ்வோமே

சங்கப் புலவர் வரிசையிலே
சால்பு மிகவே கொண்டவராம்
எங்கள் பெருமை உலகறிய
எடுத்தே இயம்பிய பெருமகனாம்

உலக மொழிகள் பலவற்றில்
உருண்டு வருதாம் இவர்பாடல்
உலக அறிஞர் வரிசையிலே
உயர்ந்து இவரும் இருப்பாரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாவலர்

நல்லை நகரில் எழுந்தவராம்
நாவலர் எனவே வளர்ந்தவராம்
அல்லல் மிகுந்த காலத்தில்
அவரும் எழுந்து வந்தவராம்

சைவம் அழியும் நிலைகண்டு
தழைத்து ஓங்கச் செய்தவராம்
சைவ சமய நூல்கள்பல
தரமாய் பதித்துத் தந்தவராம்

இலக்கணம் வகுத்துத் தந்தவராம்
இன்றமிழ் தன்னை வளர்த்தவராம்
தலம்பல சென்றே பிரசங்கம்
சால்புடன் இவரும் செய்தவராம்

கல்விச் சாலைகள் பற்பலவும்
காசினி தன்னில் தந்தவராம்
நல்ல தமிழில் நூல்கள்பல
நன்கே பதித்துத் தந்தவராம்

ஆறுமுகம் என்ற நாமமுடன்
அவனி தன்னில் வந்தவராம்
தேறிய அறிவுத் திறத்தாலே
தெள்ளு தமிழை வளர்த்தவராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம்

இன்பம் பொங்கும் ஓரிடமாம்
இனிய இல்லம் தானதுவாம்
அன்பு அம்மா அப்பாவும்
அழகுடன் வாழும் ஓரிடமாம்

தாத்தா பாட்டி உடனிருக்க
தகுந்த இன்பம் பெருகிடுமே
மூத்தோர் அறிவுரை நாம்கேட்டு
முன்னேற வழிகள் பலவுண்டே



அறிவுக் கதைகள் பலவற்றை
அன்பாய் உரைப்பாள் பாட்டியே
நெறிமுறை தன்னைச் சொல்லியே
நிந்தனை தவிர்ப்பார் தாத்தாவே

அண்ணா அக்கா உடனிருக்க
அம்மா தருவாள் உணவாமே
எண்ணில் அடங்கா இன்பமெலாம்
எமக்குக் கிடைக்கும் இடமாமே

விரும்பும் பொருட்கள் எல்லாமே
விரைந்து வந்து சேர்ந்திடுமே
வருந்தும் வேளைகள் வந்தாலும்
வாகாய் அவையும் தீர்ந்திடுமே

பண்டிகை நாட்கள் குதூகலமாய்
பாரில் நமக்கே ஆகிடுமே
எண்டிசை போற்றிட நாமெல்லாம்
இன்பம் பொங்க வாழ்ந்திடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தை

கூவிக் கூவி மரக்கறிகள்
குவித்து வைத்தே விற்றிடுவர்
நாவில் ஊறும் பழவகைகள்
நனிமிக ஆங்கே குவிந்திருக்கும்

வண்டி வண்டியாய் மரக்கறிகள்
வந்தே இங்குக் குவிந்திருக்கும்
அண்டி நாமும் வாங்கிடலாம்
அருமை மிக்க மரக்கறிகள்

கிழங்கு வகைகள் பலவுண்டு
கிடைக்கும் இங்கே அவையாவும்
விளங்கும் காய்கறி பற்பலவும்
விற்பனை செய்யக் காத்திருக்கும்

கீரை முதலாம் இலைக்கறிகள்
கீர்த்தி மிக்க பழவகைகள்
தாரை தாரையாய் வந்திருக்கும்
தண்மை மிகவே நிறைந்திருக்கும்

அடுக்கி அழகாய் வைத்திருப்பார்
அருகில் தராசும் வைத்திருப்பார்
தடுப்புப் போட்டுப் பிரித்திருப்பார்
தனித்தனி வகையாய் வைத்திருப்பார்

காய்கறி வகைகள் ஒருபக்கம்
கனிகள் பலவும் மறுபக்கம்
ஆய்ந்து நாமும் பெற்றிடலாம்
அழகான சந்தை இதுவாமே

கூவிக் கூவியே விற்றிடுவார்
குறைந்த விலையிற் தந்திடுவார்
நாவிற் கினிய சுவையுடைய
நல்ல பொருட்கள் தநதிடுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலை விதிகள்




பள்ளி செல்லும் வேளைநாம்
பாதை விதிகளைப் படிப்போமே
துள்ளி ஓடித் திரியாமல்
தொடரும் விதியை மதிப்போமே

கூட்டம் ஆகவே செல்லாமல்
குறுகித் தனிவழி செல்வோமே
ஆட்டம் போட்டே அலையாமல்
அருகாய் நடந்தே செல்வோமே




வண்டிகள் விரைவாய் வந்திடுமே
வரைமுறை இன்றியே அவையோடும்
வண்டிச் சத்தம் கேட்டவுடன்
வழியை விட்டே விலகிடுவோம்

கடவை தன்னில் கடப்போமே
காட்டும் சைகை மதிப்போமே
நடக்க உள்ள பாதைகளில்
நடந்து நாமும் செல்வோமே



கோடுகள் காட்டும் குறிப்புகளைக்
கூடி நாமும் தெளிவோமே
தேடுதல் செய்தே இவைபற்றித்
தெளிந்த அறிவைப் பெறுவோமே

சாலையில் உள்ள சைகைகளைச்
சரியாய் விளங்கிக் கொள்வோமே
சாலையில் விபத்தைத் தடுப்பதற்குச்
சரியாம் வழிமுறை நடப்போமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை




நோய்நொடி வந்தால் நாம்சென்று
நுழையும் இடந்தான் இதுவாமே
வாய்ந்த நல்ல மருந்துகளை
வாங்கித் துன்பம் தீர்ப்போமே

வைத்தியர் தாதியர் எனவாங்கே
வாகாய்ப் பலரும் இருப்பாரே
வைத்தியம் செய்திட வருவோர்க்கே
வருத்தம் தன்னைத் தீர்ப்பாரே

விடுதிகள் பலவும் இங்குண்டு
விபத்துப் பிரிவும் தனியுண்டு
சடுதியில் வந்திடும் நோய்கட்கே
சார்ந்த சிகிச்சைப் பிரிவுண்டு

சத்திர சிகிச்சைக் கூடமுண்டு
தனியே வைத்தியர் அதற்குண்டு
இத்தரை வந்திடும் நோய்கட்கே
இயன்ற சிகிச்சை இங்குண்டு

ஆய்வுக் கூடமும் இங்குண்டு
ஆய்வுகள் பலவும் நடப்பதுண்டு
நோய்வரும் காரணம் அறிவதற்கு
நுண்மைக் கருவிகள் பலவுண்டு



மகப்பேற்று விடுதியும் இங்குண்டு
மழலைகள் பலவும் பிறப்பதுண்டு
சுகம்பெற்றுச் செல்வார் பலரிங்கு
சூழ்வினை அகன்றால் சுகமிங்கு

தொற்றா நோய்க்கும் சிகிச்சைகள்
தொடராய் இங்கு பெற்றிடலாம்
வற்றா அறிவுடை வைத்தியரின்
வளமார் சேவையைப் பெற்றிடலாம்

உயிரைக் காக்கும் ஒருகூடம்
உன்னதம் ஆன ஒருகூடம்
உயிர்கள் பிறக்கும் ஒருகூடம்
உயர்ந்த சேவைக் கூடமிதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கள்

மாம்பழம் நல்ல மாம்பழமாம்
மனதைக் கவரும் மாம்பழமாம்
தீஞ்சுவை நிறைந்த மாம்பழமாம்
தெவிட்டா இன்பம் தந்திடுமாம்

பலவகை இனங்கள் இதிலுண்டு
பகரும் சுவையும் மிகவுண்டு
உலகம் புகழும் ஒருகனியாம்
உள்ளம் மகிழும் மாங்கனியாம்

தேனினும் இனிய பலாப்பழமாம்
தின்னத் தின்ன இனித்திடுமாம்
மானிடர் விரும்பும் ஒருகனியாம்
மனதில் நிலைக்கும் சுவையுளதாம்

முள்ளின் நடுவே இதுவிருக்கும்
முகிழ்க்கும் சுவையில் மிகை-
கயிருக்கும்
அள்ளி யுண்ணவே இதுவினிக்கும்
அகிலம் புகழ்ந்திடும் அருங்கனியாம்

முக்கனி தன்னில் மூத்ததுவாம்
முகிழ்க்கும் சுவையில் உயர்ந்ததாம்
அக்கனி பெயரே வாழையாம்
அதனின் பெருமை அதிகமாம்

வகைகள் பலவும் கொண்டதுவாம்
வாழையின் கனியே சுவையுடைத்-
தாம்
தொகையாய் உலகில் இதுவுண்டாம்
திகட்டாச் சுவையும் கொண்டதுவாம்

தோடை திராட்சை மாதுளையாம்
தோன்றும் இனிய பழவகையாம்
கோடை வெயிலின் வெம்மையினை
குறைக்கும் இனிய பழவகையாம்

பப்பாசி என்றொரு பழமுண்டாம்
பலரும் விரும்பும் ஒருபழமாம்
தப்பாது இவற்றை நாமுண்டால்
தரணி வாழ்வும் சிறந்திருக்கும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம்



பட்டம் நல்ல பட்டமாம்
பாலர் விரும்பும் பட்டமாம்
எட்டா உயரம் பறக்குமாம்
எழிலார் வடிவங் கொண்டதுவாம்

காற்றில் ஏறிப் பறந்திடுமாம்
களிப்பு மிகவும் கொடுக்குமாம்
காற்றின் திசையிற் பறக்குமாம்
கடிதில் உயரம் செல்லுமாம்

வண்ண வண்ணப் பட்டங்களாம்
வானில் பறக்கும் பட்டங்களாம்
அண்ணா ஏற்றும் பட்டங்களாம்
அழகு நிறைந்த பட்டங்களாம்

பல்வகை வடிவங் கொண்டதுவாம்
பார்க்க அழகைத் தந்திடுமாம்
நல்லதாம் நட்பைத் தந்திடுமாம்
நம்மை மகிழச் செய்திடுமாம்

கயிற்றில் ஏறிடும் பட்டமாம்
கரணம் போட்டும் பறக்குமாம்
உயரப் பறக்கும் பட்டமாம்
உவகை தந்திடும் பட்டமாம்



பட்டம் ஏற்றி மகிழ்ந்திடுவோம்
பாலர் கூடியே மகிழ்ந்திடுவோம்
வட்டம் போட்டுப் பாடிடுவோம்
வாழ்வில் மகிழ்வு கண்டிடுவோம்

எட்டு மூலைப் பட்டங்களாம்
ஏறியே உயரப் பறந்திடுமாம்
முட்டி வானைத் தொட்டிடுமாம்
முகமும் மலரச் செய்திடுமாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பிராணி

அக்கா வளர்க்கும் பூனைக்குட்டி
அதுவே எங்கள் செல்லக்குட்டி
அக்கம் பக்கம் பார்த்ததுவும்
அழகாய் வேட்டை ஆடிடுமே

வெள்ளை நிறத்துப் பூனைக்குட்டி
விரும்பி வளர்க்கும் பூனைக்குட்டி
துள்ளி ஓடும் பூனைக்குட்டி
தூய வெள்ளைப் பூனைக்குட்டி



எலியைப் பிடிக்க விரைந்தோடும்
எகிறிக் குதித்துத் தானோடும்
வலிமை மிகுந்த கால்களினால்
வாகாய் அதுவும் தானோடும்

அண்ணா வளர்க்கும் நாய்க்குட்டி
அழகிற் சிறந்த நாய்க்குட்டி
கண்ணாய் எங்கள் வீட்டினையே
காவல் காக்கும் நாய்க்குட்டி

வாலை ஆட்டியே விரைந்துவரும்
வணக்கம் சொல்லியே வரவேற்கும்
பாலை வரும்பிக் குடித்துவரும்
பாசங் காட்டியே வளர்ந்துவரும்

அப்பா வளர்க்கும் அணிற்பிள்ளை
அழகு கொஞ்சும் அணிற்பிள்ளை
தப்பே செய்யா அணிற்பிள்ளை
தந்திடும் இன்பம் அணிற்பிள்ளை



செல்லப் பிராணிகள் இவையாவும்
செழிப்பாய் எம்முடன் தானிருக்கும்
மெல்லப் பொழுதைப் போக்கிடலாம்
மேன்மை உடனே வாழ்ந்திடலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ என்று
அழகாய் அம்மா பாடுகிறாள்
சீராட்டிப் பாராட்டி அவளும்
சிங்காரம் ஆகவே பாடுகிறாள்

அழகுத் தம்பியும் தொட்டிலிலே
அயர்ந்து தூங்கப் பாடுகிறாள்
அழகாய் அவனும் தூங்குகிறான்
அன்னையின் இனிய பாடலினால்



உறவு முறைகள் பெயர்கூறி
உணர்வாய் அவளும் பாடுகிறாள்
உறவின் பெருமை தனைக்கூறி
உயர்த்தி அவளும் பாடுகிறாள்

அழகுச் சேலை தனையெடுத்து
அதிலே ஊஞ்சல் தானமைத்து
பழகுந் தமிழிற் பாட்டெடுத்து
பாங்காய் அவளும் பாடுகிறாள்

செல்ல மகனின் குறும்புகளைச்
சிரித்து மகிழ்வாய் சுவைத்திடுவாள்
மெல்ல அவளும் பாடுகிறாள்
மிகவே இனிக்கும் குரலாலே

துக்கம் எல்லாம் பறந்தோடும்
தூய அன்னை தாலாட்டில்
மிக்கவே மகிழ்வு தானோங்கும்
மேலாம் அன்னை தாலாட்டில்

அன்னை பாடும் தாலாட்டை
அழகாய் கேட்டு மகிழ்வோமே
அன்னை அவளின் பெருமையினை
அவனி புகழச் செய்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தாத்தா

தங்கத் தாத்தா என்றிடுவோம்
தமிழால் அவரைப் போற்றிடுவோம்
எங்கள் ஊரின் கவியிவரே
ஏற்றம் பெற்ற கவியிவரே

நவாலி தன்னில் பிறந்தவராம்
நற்றமிழ் வளர்த்த கவியிவராம்
அவாவி நல்ல அருங்கவிகள்
அழகுத் தமிழில் தந்தவராம்

ஆடிப் பிறப்பின் பெருமையினை
அழகாய் கவியில் சொன்னவராம்
கூடிக் குடிக்கும் கூழ்பற்றிக்
குதூகலப் பாட்டிற் சொன்னவராம்

மழலைகள் மகிழும் கவிபலவும்
மாண்புடன் அவரே தந்தவராம்
பழகுந் தமிழிற் பாடல்கள்
பாங்காய் அவருந் தந்தவராம்

சோம சுந்தரர் என்றவரைச்
சொல்லிப் பிறரும் அழைப்பாராம்
நாமும் அவர்தம் பெருமையினை
நன்கு பேசியே மகிழ்வோமே

அழகுத் தமிழிற் கவிபலவும்
அமைத்துத் தந்த கவியிவராம்
பழகும் நல்ல பண்புகளைப்
பாட்டின் மூலம் சொன்னவராம்

தாடிக் கிழவன் என்றவரைச்
சாற்றிச் சிலபேர் சொல்வாராம்
ஆடிப் பாடி மகிழ்ந்திடவே
அழகுப் பாடல் தந்தவராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள்

வருடம் ஒருமுறை வந்திடுமாம்
வயதும் ஒன்று கூடிடுமாம்
விரும்பும் அன்பு கிடைத்திடுமாம்
விலையில் பரிசும் வந்திடுமாம்

உற்றார் உறவினர் வருவாராம்
உண்மை அன்பைப் பொழிவாராம்
பெற்றார் மகிழ்வு அடைவாராம்
பெரிய பரிசுகள் தருவாராம்



அன்பு நண்பர்கள் வருவாராம்
அரிய பரிசுகள் தருவாராம்
என்றும் இன்பம் பொங்கிடுமாம்
என்றன் பிறந்த நாளிதுவாம்

ஆலயம் நாடிச் சென்றிடுவோம்
அர்ச்சனை செய்தே வழிபடுவோம்
சாலவும் வறிய மக்களுக்கே
சார்ந்து உதவிகள் செய்திடுவோம்

ஆடம் பரங்கள் தவிர்த்திடுவோம்
அதனின் செலவைக் குறைத்திடுவோம்
வாடும் மக்கள் துயர்போக்க
வாகாய் உதவிகள் செய்திடுவோம்

மரமும் ஒன்று நாட்டிடுவோம்
மழையின் தேவை உணர்ந்திடுவோம்
சிரமுந் தாழ்த்தி வணங்கிடுவோம்
சீரிய வாழ்வும் பெற்றிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல்

ஊஞ்சல் நல்ல ஊஞ்சலாம்
உவகை பொங்கும் ஊஞ்சலாம்
ஊஞ்சல் ஏறியே ஆடிடவே
உள்ளம் களிப்புக் கொள்ளுமே

பாட்டுப் பாடியும் ஆடிடலாம்
பலருங் கூடியும் ஆடிடலாம்
நாட்டுப் புறத்தில் நாமெல்லாம்
நாடி ஆடும் ஊஞ்சலாம்

மரத்தில் ஊஞ்சல் கட்டுவோம்
மனதில் மகிழ்வு கொள்ளுவோம்
கரங்கள் கொண்டே ஆட்டுவோம்
களிப்பு மனதில் கொள்ளுவோம்

உயர உயர ஆடிடவே
உள்ளம் மகிழ்வு காணுமே
பயமும் நீங்க ஆடலாம்
பாலர் கூடி ஆடலாம்



பள்ளிக் கூடம் தன்னிலும்
பாலர் பூங்கா தன்னிலும்
துள்ளி ஆடக் கிடைக்குமே
துன்பந் தன்னை நீக்குமே

பாலர் நாங்கள் ஆடுவோம்
பாட்டுப் பாடி ஆடுவோம்
சீலம் மிகுந்த ஊஞ்சலாம்
சிரித்து மகிழும் ஊஞ்சலாம்

பலவித வண்ண வடிவுகளில்
பாரின் மீதிற் கிடைத்திடுமாம்
நலமிகக் கொண்டே நாமாடும்
நல்ல ஊஞ்சல் தானிதுவாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானவில்

வானம் தன்னில் தோன்றிடுமாம்
வர்ணம் ஏழு கொண்டதுவாம்
வானில் வளைவாய் தெரிந்திடுமாம்
வானவில் எனவே பேர்பெறுமாம்

மழையின் போதே தோன்றிடுமாம்
மனதில் மகிழ்வு தந்திடுமாம்
மழையின் வரவைக் கூறிடுமாம்
மறைந்து உடனே போய்விடுமாம்

பச்சை சிவப்பு மஞ்சளொடு
பகரும் நீலம் கருநீலம்
இச்சை கொண்ட ஆரஞ்சும்
இலங்கும் ஊதா நிறமுடனே

ஏழு வர்ணம் கொண்டதுவாம்
எமக்கு மகிழ்வு தந்திடுமாம்
சூழும் அழகால் சிறந்ததுவாம்
சோர்வு தன்னை நீக்கிடுமாம்

வானவில் கண்டே மகிழ்ந்திடுவோம்
மனதில் மகிழ்வு கண்டிடுவோம்
ஞானமும் புவியில் பெற்றிடுவோம்
நலமாய் நாமும் வாழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பழக்கவழக்கங்கள்

காலையில் தினமும் கண்விழிப்போம்
காலைக் கடன்கள் தனைமுடிப்போம்
மாலையில் தினமும் விளையாடுவோம்
மனதில் மகிழ்வைக் கூட்டிடுவோம்

அன்னை தந்தை தனைமதிப்போம்
அவரின் பேச்சைக் கேட்டிடுவோம்
முன்னை வினைகள் தனையறுப்போம்
முழுதாய் இறையைச் சரணடைவோம்

மூத்தோர் வார்த்தை மதித்திடுவோம்
முழுதாய் அவர்சொல் கேட்டிடுவோம்
ஏத்தியே இறையை வணங்கிடுவோம்
எவர்க்கும் தீங்கைச் செய்திடோம்

அன்பாய்த் தினமும் பேசிடுவோம்
அடுத்தவர் குறையைப் பொறுத்திடுவோம்
வன்மம் தன்னைத் தவிர்த்தடுவோம்
வம்புச் சண்டை விலக்கிடுவோம்

ஒற்றுமை பேணி வளர்த்திடுவோம்
ஒழுக்கம் தன்னைக் கடைப்பிடிப்போம்
ஒற்றுமை உயர்வு நல்குமென்ற
உண்மை தன்னை உணர்ந்திடுவோம்

ஆலயம் நாளும் சென்றிடுவோம்
அரனை வணங்கி நலம்பெறுவோம்
சீலமாய் வாழப் பழகிடுவோம்
சிறப்புகள் அதனால் பெற்றிடுவோம்

கல்வியின் பெருமை உணர்ந்திடுவோம்
கற்று நாளும் உயர்ந்திடுவோம்
வல்லமை கொண்டு வாழ்ந்திடுவோம்
வையகம் தன்னில் உயர்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூத்தோர்

மூத்தோர் எங்கள் சொத்தாகும்
முதிர்ந்த அறிவின் விளைவாகும்
ஏத்தியே அவரைப் பேணிடுவோம்
என்றும் அவருரை கேட்டிடுவோம்

சொத்தாய் அவரைப் பேணிடுவோம்
சுகமாய் வாழவே வைத்திடுவோம்
முத்தாம் அவரைப் போற்றிடுவோம்
முதிர்ந்த அறிவைப் பெற்றிடுவோம்

ஒதுக்கி அவரை வைத்திடோம்
உண்மை அன்பைக் காட்டிடுவோம்
புதுக்கி அவருரை கேட்டிடுவோம்
புதுமை வாழ்வில் கண்டிடுவோம்

பட்டறிவு உடைய பெரியோரைப்
பணிந்து வாழ்தல் கடனாகும்
துட்டச் செயல்கள் செய்யாமல்
தூய்மை அன்பு காட்டிடுவோம்

நோய்நொடி தன்னில் காத்திடுவோம்
நொந்து வாடலைத் தவிர்த்திடுவோம்
வாய்தனில் வதைத்தல் விலக்கிடுவோம்
வையம் தன்னில் உயர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாட்டி சுட்ட வடை

பாட்டி ஒருவர் பக்குவமாய்
பருத்த மரத்து நீழலிலே
போட்டி போட்டு வடையினையே
புதிதாய் சுட்டு விற்றாரே

காக்கை ஒருவர் வந்தாரே
கடிதாய் வடையைக் கண்டாரே
ஏக்கம் கொண்டு இருந்தாரே
எளிதாய் வழியும் கண்டாரே

விறகுச் சுள்ளி தனையெடுத்து
வேகமாய் பாட்டி அருகினிலே
இறக்கி வைத்து மகிழ்ந்தாரே
இதற்குக் கூலி கேட்டாரே

பாட்டி மகிழ்ந்து காக்கைக்குப்
பகிர்ந்து வடையைக் கொடுத்தாரே
பாட்டி தந்த வடையுடனே
பறந்து காக்கையார் சென்றாரே

கூட்டில் ஏறிக் காக்கையாரும்
கொண்டு வந்த வடைதன்னை
நாட்டம் கொண்டு உண்டிடவே
நரியார் அதனைக் கண்டாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்காய் காக்காய் காக்காயே
கானாப் பாட்டுப் பாடாயே
சோக்காய் இருக்கும் உன்குரலைச்
சுகித்து நானும் மகிழ்வேனே

என்று நரியார் உரைத்திடவே
எண்ணம் புரிந்த காக்கையார்
நன்று காலில் வடையெடுத்து
நலமாய் பாட்டுப் பாடினாரே

ஏமாந்து போகும் காக்கையென
எண்ணிய நரியார் ஏமாந்தார்
தாமாய் அந்தக் காக்கையிடம்
தந்திடு வடையெனக் கேட்டாரே

பாட்டிக்கு உதவி செய்திட்டால்
பகிர்ந்து வடையும் தருவாரே
போட்டி போட்டே அடுத்தவரை
புரட்டிப் போடுதல் ஆகாதென

காக்கை சொன்ன உரைகேட்டு
காட்டில் விறகு பொறுக்கிடவே
ஊக்கம் கொண்டே நரியாரும்
உண்மை உழைப்புக் கண்டாரே

விறகு நிறைந்த பாட்டியும்
விரைந்து மகிழ்ந்து பாசமுடன்
நறிய வடைகள் சிலவற்றை
நரிக்குக் கொடுத்து மகிழ்ந்தாரே

உழைப்பின் பெருமை உணரந்தவுடன்
உயர்வை நரியும் கண்டாரே
உழைத்து வாழ்தல் வேண்டுமென
உள்ளம் தன்னில் உணர்ந்தாரே

அடுத்தவர் தம்மை ஏய்க்காமல்
அவனி தன்னில் வாழ்ந்திடவே
தொடுத்துப் பணிகள் செய்திடுவோம்
தூய்மை ஆகவே வாழ்ந்திடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணத்துப்பூச்சி

வண்ண வண்ணப் பூச்சியாம்
வடிவு நிறைந்த பூச்சியாம்
எண்ணம் நிறைந்த பூச்சியாம்
எங்கும் நிறைந்த பூச்சியாம்

வண்ணம் பலவுங் கொண்டதுவாம்
வட்டம் இட்டுப் பறந்திடுமாம்
கண்ணைக் கவரும் பூச்சியாம்
களிப்புத் தந்திடும் பூச்சியாம்



பூக்கள் மீதிற் சென்றமர்ந்து
பூவின் தேனைக் குடித்திடுமாம்
பாக்கள் பாடிப் புலவோரும்
பரந்து புகழும் பூச்சியாம்

அழகு வடிவங் கொண்டதுவாம்
அருமை ஆன பூச்சியாம்
பழக இனிமை கொண்டதாம்
பார்த்து மகிழும் பூச்சியாம்

பாலர் நாங்கள் பறந்துமே
பற்றிப் பிடிக்க முயல்வோமே
ஞாலம் மீதில் நாம்கண்ட
நல்ல பூச்சி இதுவாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டுத்தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
எழிலாய் பயிர்கள் வளர்கிறதே
எங்கள் வீட்டுத் தேவைக்கே
ஏற்ப விளைவுகள் கிடைத்திடுதே

கத்தரி வெண்டி தக்காளி
கசப்பு நிறைந்த பாகலுடன்
சித்தம் நிறைந்த கீரைவகை
சிறப்பாய் இங்கும் விளைந்திடுமே

இயற்கைப் பசளை தனையிட்டு
இதமாய் அப்பா செய்வாரே
செயற்கைப் பசளை எதனையும்
சேர்க்க அவரும் மாட்டாரே

எஞ்சும் மரக்கறி சிலவற்றை
எதிர்த்த வீட்டுக் காரருக்கும்
கொஞ்சம் கொடுத்து மகிழ்வோமே
கூடி நாமும் சுகிப்போமே

மருந்துகள் இல்லா மரக்கறிகள்
மனமாய் இங்குப் பறித்திடலாம்
விரும்பும் எந்த மரக்கறியும்
விதைத்துப் பலனைப் பெற்றிடலாம்

இருக்கும் சிறிய இடத்தினிலும்
இதமாய்ப் பயிர்கள் தனையிட்டு
பொருந்தும் பசளை போட்டெடுத்து
போற்றி நாமும் வாழ்வோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுவும் பாலும்

பசுவே பசுவே பால்தருவாய்
பாலர் அருந்தப் பால்தருவாய்
பசுவே பசுவே புல்தருவேன்
பானை நிறையப் பால்தருவாய்

அருந்த மிகவும் சுவையாகும்
ஆவின் பாலே சத்தாகும்
உருக்கம் கொண்ட பசுநீயே
உயர்வாம் பாலைத் தருவாயே

பசுவின் பாலைக் குடித்திடலாம்
பாலைத் தயிராய் ஆக்கிடலாம்
பசுவின் தயிரைக் கடைந்திடவே
பசுமை வெண்ணெய் தானாகும்

வெண்ணெய் உருக்க நெய்யாகும்
வேண்டும் பொழுதில் பயனாகும்
எண்ணம் போலே அருந்திடலாம்
எளிதில் மகிழ்வு கண்டிடலாம்

அருஞ்சுவைப் பாலைத் தருகின்ற
அருமை ஆன விலங்காகும்
தருஞ்சுவை மிக்க பாலாலே
தரணியில் இதுவே உயர்வாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு



நட்பு ஒன்றே பெரிதாகும்
நானிலம் தன்னில் உயர்வாகும்
நட்பு தன்னைப் பேணிடுவோம்
நலங்கள் பெருகிட வாழ்ந்திடுவோம்

சாதி சமயம் பார்க்காமல்
சடுதியில் வருவது நட்பாமே
பாதி வழியிற் பிரியாமல்
பயணம் வரையும் தொடருமே

ஏழை என்றுமே எண்ணாமல்
என்றும் தொடர்வது நட்பாமே
நாளை என்றுமே இருக்காமல்
நலமாய்த் தொடர்வது நட்பாமே

துன்பம் வந்தால் துடிப்பதுவும்
துயரந் தன்னில் இணைவதுவும்
இன்பம் வந்தால் மகிழ்வதுவும்
இணைந்த நட்பின் இயல்பாமே

நட்பின் பெருமை உலகறிய
நாட்டிக் காட்டியது பாரதமே
நட்பின் சிகரம் கர்ணனும்
நாட்டி இதனைக் காட்டினானே

கங்கை வேடன் குகனுடனே
கரத்தைக் கோர்த்தான் ராமனே
பொங்கும் அன்புப் பெருக்காலே
புகழை அவனும் பெற்றானே

நட்பின் பெருமை நல்கிடவே
நல்ல கதைகள் பலவுண்டே
வெட்கம் வெறுப்புக் காட்டாமல்
விளைவைத் தருவது நட்பாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைபேசி

தொலைவில் உள்ள உறவுகளுடன்
தொடரும் உறவைப் பேணிடவே
நிலையாய் எமக்குக் கிடைத்ததுவே
நெடும்பயன் நல்கும் தொலைபேசி

பலவித வடிவில் கிடைத்திடுமாம்
பலவித விலையும் இதற்குண்டாம்
பலவித வசதிகள் இதிலுண்டாம்
பயன்மிக உடைய தொலைபேசி




பாடல்கள் பலவும் கேட்டிடலாம்
படங்கள் அழகாய்ப் பதிந்திடலாம்
ஆடல்கள் எல்லாம் பார்த்திடலாம்
அவற்றை இதனில் பதிந்திடலாம்

நேரத்தை நாமும் தெரிந்திடலாம்
நிகழ்வுகள் நேரில் கண்டிடலாம்
தூரத்து உள்ள உறவுகளுடன்
துல்லியம் ஆகவே கதைத்திடலாம்

முகமும் பார்த்துக் கதைத்திடலாம்
முழுதாய் அன்பைச் செலுத்திடலாம்
அகமும் மலர்வு கண்டிடலாம்
ஆனந்தம் அதனால் அடைந்திடலாம்

எங்கள் ஊரின் நிகழ்வுகளை
எடுத்து நாமும் வைத்திடலாம்
எங்கள் உறவுகள் கண்டிடவே
எளிதில் அனுப்பி மகிழ்ந்திடலாம்

விஞ்ஞானம் கண்ட ஒருபடைப்பாம்
விந்தை மிகவும் கொண்டதுவாம்
எஞ்ஞான்றும் புகழைத் தந்திடுமாம்
எமக்கு மகிழ்வைத் தந்திடுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓலைத் தொப்பி

வட்ட வட்டத் தொப்பியாம்
வடிவு நிறைந்த தொப்பியாம்
குட்டிப் பாப்பா தலையினிலே
குலவும் நல்ல தொப்பியாம்

வண்ண வண்ணத் தொப்பியாம்
வர்ணம் பலதும் கொண்டதாம்
எண்ண எண்ண இனிக்குமாம்
எங்கள் தலையிற் தொப்பியாம்



படங்கள் நிறைந்த தொப்பியாம்
பனையின் ஓலைத் தொப்பியாம்
தடங்கல் எதுவுந் தந்திடாத
தரத்தில் உயர்ந்த தொப்பியாம்

வெயிலின் வெம்மை விலக்கிடுமாம்
விரும்பும் ஓலைத் தொப்பியாம்
மயிலின் தோகை போலதுவும்
மனதை மயக்கும் தொப்பியாம்

குருத்து ஓலைகள் தனையெடுத்து
குறுகச் சீவி வார்ந்தெடுத்து
நெருக்கம் ஆகவே இழைத்தெடுத்த
நேர்த்தி ஆனதோர் தொப்பியாம்

பாலர் நாங்கள் அணிந்திடுவோம்
பாட்டுப் பாடி ஆடிடுவோம்
ஞாலம் மீதில் நம்பனையின்
நல்ல பெருமை விளக்கிடுவோம்

என்றும் வாங்கி அணிந்திடுவோம்
எங்கள் வெப்பம் தணித்திடுவோம்
நன்றுமே வளரும் நம்பனையின்
நல்ல பயனைப் பெற்றிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பரத் திருவிழா

எங்கள் ஊரின் கோவிலிலே
எட்டாம் நாளின் திருவிழா
எங்கும் கூட்டம் நிறைந்திட
ஏற்றம் காணும் திருவிழா

வெள்ளைப் பூவின் அலங்காரம்
மிகுந்த அழகைத் தந்திடவே
வெள்ளைப் பசுவின் மீதேறி
வீதியில் வந்தார் எம்பெருமான்

வண்ண வண்ணச் சப்பரமாம்
வாகாய் அலங்காரம் பண்ணியதாம்
கண்ணைப் பறிக்கும் விளக்குகளாம்
களிப்பு மிகவும் தந்திடுமாம்

காதிற்கு இனிமை தந்திடவே
கருதும் மேள தாளமாம்
நாதசுர கானம் எங்கள்
நற் செவியை நிறைக்குமாம்

பொய்க்காற் குதிரை ஆட்டமாம்
போற்றும் படியாய் இருந்ததாம்
பொய்க்காற் குதிரை ஆட்டத்திற்
புகுந்து மயிலும் ஆடியதாம்

பட்டுச் சட்டை தாவணியிற்
பாவையர் பறந்து திரிந்தனராம்
பட்டு வேட்டி சால்வையுடன்
பாங்காய் இளைஞர் பரவினராம்

காற்றில் கலந்த நாதசுரம்
கனத்த இசையைத் தந்ததுவாம்
போற்றி இறையைப் புகழ்ந்ததுவாம்
புண்ணியம் மிகவும் பெருகியதாம்

எங்கள் ஊரின் பெருமைகளை
எடுத்துக் காட்டும் திருவிழா
பங்கம் இன்றியே நடந்ததாம்
பாரில் மகிழ்வு பெருகியதாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடப் பிறப்பு

புதிய வருடம் பிறந்ததுவாம்
புதிய உணர்ச்சி தந்ததுவாம்
புதிய புதிய எண்ணங்கள்
புத்தி தன்னில் எழுந்ததுவாம்

தமிழர் வருடப் பிறப்பிதுவாம்
தனித்துவம் மிகவே கொண்டதுவாம்
தமிழர் பண்டிகை நாட்களிலே
தரத்தில் உயர்வும் கொண்டதுவாம்

புத்தம் புதிய ஆடைகள்
புனைந்து நாமும் மகிழலாம்
புத்தம் புதிய பலகாரம்
புசித்து நாமும் மகிழலாம்



உறவினர் வரவும் கூடிடுமாம்
உண்மை அன்பும் பெருகிடுமாம்
உறவுகள் கூடியே விளையாட
உள்ளம் மகிழ்வு கண்டிடுமாம்

மருத்து நீரைத் தலையில்வைத்து
மகிழ்ந்து நாமும் நீராடி
விருந்து நாமும் உண்போமே
விளங்கும் நட்பு வளர்ப்போமே

பெரியோர் தம்மை வணங்கியே
பெருமை மிகவும் பெறுவோமே
பெரியோர் தங்கள் கையாலே
பணமும் பெற்று மகிழ்வோமே

ஆலயம் சென்று வணங்கிடுவோம்
ஆண்டவன் அருளைப் பெற்றிடுவோம்
சாலவும் சிறந்த நற்பணிகள்
செய்து நாமும் மகிழ்வோமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் விளக்கு

வண்ண வண்ண விளக்குகளாம்
வடிவு நிறைந்த விளக்குகளாம்
விண்ணை எட்டும் விளக்குகளாம்
விலையில் உயர்ந்த விளக்குகளாம்

பலவித வடிவங் கொண்டதுவாம்
பல்வகை இனங்கள் கொண்டதுவாம்
பலவித வண்ணங் கொண்டதுவாம்
பலரும் போற்றும் விளக்குகளாம்

அலங்கார விளக்குகள் ஆயிரமாம்
அவற்றின் அழகு பேரழகாம்
நிலமிசை நீண்ட பயனுடைத்தாம்
நெஞ்சம் நிறைந்த விளக்குகளாம்



எடிசன் கண்ட ஒருபடைப்பாம்
ஏற்றம் மிகவும் கொண்டதுவாம்
படியாய் வளர்ச்சியைக் கண்டதுவாம்
பாடம் மிகவுந் தந்திடுமாம்

இருளைப் போக்கி ஒளிதருமாம்
இப்புவி தன்னிற் சிறப்புடைத்தாம்
தருணம் தன்னிற் பயனுடைத்தாம்
தாரணி போற்றும் ஒருபடைப்பாம்

தட்டி விட்டால் எரிந்திடுமாம்
தடையைப் போட்டால் நின்றிடுமாம்
முட்டி விட்டால் ஆபத்தாம்
மூச்சைக் கூட நிறுத்திடுமாம்

மெத்தக் கவனமாய் கையாள்வோம்
மிகுந்த பயனைப் பெற்றிடுவோம்
இத்தரை தன்னின் அதிசயமாம்
எங்கள் எடிசன் கண்டதுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார்

பாப்பாப் பாட்டுப் பலபாடிப்
பாரில் உயர்ந்த ஒருபுலவன்
பாப்பாப் பாட்டால் பெயர்பெற்ற
பாரதி என்ற புலவனவன்

பாடியே மகிழப் பாடல்கள்
பற்பல தந்த ஒருபுலவன்
கூடியே நாமும் விளையாடக்
கும்மிப் பாடல் தந்தவனே

இலகாய் நாமும் பாடிடவே
இனிய பாடல் தந்தவனே
நலமாய் நாமும் வாழ்ந்திடவே
நல்ல வழிகள் சொன்னவனே



முண்டாசு கட்டி இருந்தவனே
முத்தமிழ வளர்த்து வாழ்ந்தவனே
எண்டிசை போற்றிட இருந்தவனே
எங்கள் தமிழை வளர்த்தவனே

முறுக்கு மீசை கொண்டவனே
முயன்று தமிழை வளர்த்தவனே
நறுக்காய் கவிகள் நவின்றவனே
நானிலம் போற்றும் புலவனே

எட்டய புரத்தின் தோன்றலவன்
எங்கள் தமிழின் காவலனவன்
மட்டிலாக் கவிகள் தந்தவனவன்
மண்ணகம் புகழும் மாகவிஞன்

தமிழின் பெருமை போற்றிடுவோம்
தங்கப் புலவனை மதித்திடுவோம்
அமிழ்தின் இனிய தமிழ்மொழியை
அகிலத் துயரச் செய்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் பறவைகள்

காகா என்றே கரைந்திடுமாம்
கரிய நிறமும் கொண்டதுவாம்
காகா என்றே கரைவதனால்
காகம் என்றே பேர்பெறுமாம்



கூடியே உணவை உண்டிடுமாம்
கூடும் அழுக்கை அகற்றிடுமாம்
தேடியே உணவைத் தின்னுமாம்
தேர்ந்த உறவைப் பேணிடுமாம்

கூகூ என்றே கூவிடுமாம்
குரலில் இனிமை கொண்டதுவாம்
கூகூ என்றே கூவுதலால்
குயில் என்றே பேர்பெறுமாம்



கரிய நிறத்தைக் கொண்டதுவாம்
கத்தும் குரலும் இனியதுவாம்
கரிய காகக் கூட்டினிலே
களவாய் முட்டை இட்டிடுமாம்

கீகீ என்றே கீச்சிடுமாம்
கீர்த்தி மிகவும் கொண்டதுவாம்
கீகீ என்றே கத்துவதால்
கிளி என்றே பேர்பெறுமாம்



பச்சை வண்ணம் கொண்டதுவாம்
பலரும் விரும்பும் பறவையாம்
இச்சை கொண்டு இல்லத்தில்
இளையோர் வளர்த்து மகிழ்வராம்

காணும் பறவைகள் இவையெல்லாம்
களிப்பை மிகவுந் தந்திடுமாம்
மாணுற இயற்கை தந்தளித்த
மகிழும் பறவைக் கூட்டங்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரின் ஆக்கத்தில் இதுவரை...



1. பாலர் பாடல் திரட்டு
2. வேதவனம்
3. வேதவன விநாயகர் பிள்ளைத் தமிழ்
4. வயலூரானின் வரிகள்
5. நெஞ்சுறுத்தும் நிஜங்கள்
6. பன்றித் தலைச்சி அம்மன் பிள்ளைத் தமிழ்
7. வேதவன விநாயகர் கவசம்
8. பனிக்கண்டிக் காளி
9. வேதவன விநாயகர் அந்தாதி
10. குருதி படாக் காயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயல்விழி அறிவொளி முன்பள்ளி

அன்பு அறம் அறிவு



ISBN 978-955-38036-4-1

கயல்விழி சிறீபதி நினைவாக

கயல்விழி அறிவொளி முன்பள்ளியினால் (கயல்விழி ஒழுங்கை, அறிவொளி வீதி, மீசாலை வடக்கு, கொடிகாமம்)
மிக்கி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org